கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

# பட்டுவளர்ச்சித் துறை

# செயல்முறைத் திட்டம்

# 2016 - 2017

# மானியக் கோரிக்கை எண்.18

பா. பென்ஜமின்
ஊரகத் தொழில்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

# பட்டுவளர்ச்சித் துறை

## 2016–2017–ஆம் ஆண்டிற்கான செயல்முறைத் திட்டம்

இந்திய அளவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் கீழ்க்கண்ட முக்கிய செயல்பாடுகளில் தமிழகம் தொடர்ந்து ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

- **மாநிலத்தில், 100 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி பட்டுக்கூடு உற்பத்தி 78 கிலோ கிராம். ஆனால் தேசிய அளவில் சராசரி உற்பத்தி 59.50 கிலோ கிராம்.**
- **மொத்த பட்டு உற்பத்தியில், 85% வெண்பட்டு ஆகும். 2016-2017–ஆம் ஆண்டில் தமிழகம் 1627 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்துள்ளது.**
- **தொகுப்பு அபிவிருத்தி திட்ட செயலாக்கம்.**

### (அ) 100 முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக்கூடு அறுவடை

100 முட்டைத் தொகுதிகளுக்கான பட்டுக்கூடு அறுவடை சமீப காலமாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான பட்டுக்கூடு அறுவடை சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை (கிலோ கிராம்) |
|---|---|---|
| 1 | 2012-2013 | 69.690 |
| 2 | 2013-2014 | 71.500 |
| 3 | 2014-2015 | 73.900 |
| 4 | 2015-2016 | 77.000 |
| 5 | 2016-2017 | 78.000 |

## (ஆ) இளம்புழு வளர்ப்பு மையங்கள்

விவசாயிகள் இளம்புழுக்களை பயன்படுத்துவதால் பட்டுக்கூடு உற்பத்தி திறன் அதிகரித்து பட்டுப்புழு மகசூல் இழப்பு குறையும் என்ற கோட்பாடு நிரூபணமாகிறது. விவசாயிகள் இளம்புழுக்களைப் பெற்று புழுவளர்ப்பு மேற்கொள்வது நிலையான மற்றும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது.

இளம்புழுக்கள் விநியோகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வருடம் | மொத்த பட்டு முட்டை வளர்ப்பு (இலட்சத்தில்) | இளம்புழுக்களாக வளர்க்கப்பட்டது (இலட்சத்தில்) | விழுக்காடு (%) | இளம்புழு வளர்ப்பு மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 2012-2013 | 114.977 | 31.410 | 27 | 75 |
| 2 | 2013-2014 | 100.797 | 31.639 | 32 | 132 |
| 3 | 2014-2015 | 142.206 | 73.624 | 52 | 135 |
| 4 | 2015-2016 | 162.382 | 104.420 | 64 | 135 |
| 5 | 2016-2017 | 153.206 | 118.681 | 77 | 135 |

## (இ) தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொகுப்பு அணுகுமுறை

தமிழகத்தில் தொகுப்பு அபிவிருத்தித் திட்டம் 2008–2009–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2013–ஆம் ஆண்டு முதல் 28 தொகுப்புகள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில், வெண்பட்டு முட்டை வளர்ப்பு, பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வெண்பட்டு உற்பத்தி ஆகிய இனங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வருடம் | வளர்த்த முட்டைத் தொகுதிகள் (இலட்சத்தில்) | பட்டுக்கூடு உற்பத்தி (மெட்ரிக் டன்) | பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | 100 முட்டை தொகுதிகளுக்கு அறுவடை (கிலோ கிராமில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2012-2013 | 24.909 | 1,823.141 | 293.300 | 73.190 |
| 2 | 2013-2014 | 38.450 | 2,822.264 | 451.562 | 73.400 |
| 3 | 2014-2015 | 55.852 | 4,218.997 | 692.020 | 75.540 |
| 4 | 2015-2016 | 76.389 | 5,965.100 | 954.416 | 78.088 |
| 5 | 2016-2017 | 75.909 | 5,948.763 | 951.802 | 78.370 |

## (ஈ) கச்சாப்பட்டு உற்பத்தி

மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதில், தமிழக விவசாயிகள் முன்னோடியாகத் திகழ்கின்றனர். மாநிலத்தில் தரமான வெண்பட்டு உற்பத்தியைப் பெருக்க தேவையான தொழில்நுட்பத்தினை புகுத்தி நிதி உதவிகளை பட்டு வளர்ச்சித்துறை வழங்கி வருகிறது. வெண்பட்டு உற்பத்தி மற்றும் மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு உற்பத்தி விழுக்காடு 2016–2017ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

இவ்வினத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | மொத்த கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | வெண்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்) | மொத்த கச்சாப் பட்டு உற்பத்தியில் வெண்பட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | 2012-2013 | 1,185 | 575.50 | 48.6 |
| 2 | 2013-2014 | 1,120 | 710.63 | 63.4 |
| 3 | 2014-2015 | 1,602 | 1,206.72 | 75.3 |
| 4 | 2015-2016 | 1,897 | 1,531.75 | 80.7 |
| 5 | 2016-2017 | 1,914 | 1,627.00 | 85.0 |

பட்டு வளர்ச்சித்துறையின் முக்கிய செயல்பாடுகள் குறித்த சாதனை விவரங்கள் அட்டவணை எண்.1 முதல் 8 வரை பின்வருமாறு:

## 1. பட்டுக்கூடு உற்பத்தி

2016–2017ஆம் ஆண்டில், **12,154** மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | பட்டுக்கூடு உற்பத்தி (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1 | 2012-2013 | 8,013 |
| 2 | 2013-2014 | 7,206 |
| 3 | 2014-2015 | 10,256 |
| 4 | 2015-2016 | 12,043 |
| 5 | 2016-2017 | 12,154 |

## 2. அரசு பட்டுப் பண்ணைகள்

### (அ) பண்ணை வருவாய்

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்காக அரசு பட்டுப் பண்ணைகளில் சில பண்ணைகளின் செயல்பாடுகளை விதைக்கூடு உற்பத்தி, வர்த்தக ரீதியிலான பட்டுக்கூடு உற்பத்தி, மல்பெரி நாற்று உற்பத்தி மற்றும் இளம்பட்டுப்புழுக்களை வளர்ப்பது என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு பட்டுப் பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | பண்ணை வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2012-2013 | 72.040 |
| 2 | 2013-2014 | 73.532 |
| 3 | 2014-2015 | 87.966 |
| 4 | 2015-2016 | 95.340 |
| 5 | 2016-2017 | 86.938 |

### (ஆ) அரசு பட்டுப்பண்ணைகளில் விவசாயிகளுக்கு பயிற்சி

2016–2017ஆம் ஆண்டில், அரசு பட்டுப்பண்ணைகளில் **6,178** விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கூடு உற்பத்தித்திறனை அதிகரிக்க, அரசு பட்டுப் பண்ணைகளில் மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

அரசு பட்டுப் பண்ணைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | பயிற்சி பெற்ற விவசாயிகள் |
|---|---|---|
| 1 | 2012-2013 | 5,430 |
| 2 | 2013-2014 | 5,237 |
| 3 | 2014-2015 | 6,860 |
| 4 | 2015-2016 | 6,060 |
| 5 | 2016-2017 | 6,178 |

**(இ) அரசு பட்டுப்பண்ணைகளில் மல்பெரி நாற்று உற்பத்தி**

2016–2017ஆம் ஆண்டில், பட்டுவளர்ச்சித் துறையின் அரசு பட்டுப் பண்ணைகளில் **44.347** இலட்சம் மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மல்பெரி நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்க ப்பட்டு புது நடவிற்காக பயன்படுத்தப்பட்டன.

அரசு பட்டுப்பண்ணைகளின் கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | மல்பெரி நாற்று உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2012-2013 | 36.540 |
| 2 | 2013-2014 | 35.410 |
| 3 | 2014-2015 | 39.337 |
| 4 | 2015-2016 | 42.443 |
| 5 | 2016-2017 | 44.347 |

**3. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதியின் கீழ் தீர்வை (லெவி) வசூலித்தல்**

அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் காஞ்சிபுரம் அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் வர்த்தகம் செய்யப்படும் பட்டுக்கூடு/பட்டுநூலின் மதிப்பில் விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள், பட்டுநூல் விற்பவர் மற்றும் வாங்குபவரிடமிருந்து தலா 0.75 விழுக்காடு வீதம் தீர்வை (லெவி) வசூலிக்கப்பட்டு, பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதியில் சேர்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தீர்வை (லெவி) விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வருடம் | தீர்வை (லெவி) வசூல் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2012-2013 | 203.523 |
| 2 | 2013-2014 | 157.500 |
| 3 | 2014-2015 | 137.972 |
| 4 | 2015-2016 | 153.394 |
| 5 | 2016-2017 | 180.115 |

## 4. பட்டுக்கூட்டுக்கு பிந்தைய பகுதி

பட்டுக்கூட்டுக்கு பிந்தைய பகுதியை வலுப்படுத்த பல்வேறு தரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் கிரியா ஊக்கித்திட்டம் மற்றும் மத்திய பகுதி திட்டங்களின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட பட்டு நூற்பு அலகுகள் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வருடம் | சர்க்கா / மின் மோட்டார் சர்க்கா | | காட்டேஜ் பேசின் அலகு | | பலமுனை நூற்பு அலகு | | தானியங்கி நூற்பு அலகு | | வெப்பக் காற்று உலர்த்தி | தறிகள் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | ஏனங்கள் | அலகு | எண்ணிக்கை | அலகு | ஏனங்கள் |
| 1 | 2012-2013 | - | - | 10 | 60 | 2 | 20 | - | - | 5 | - | 17 | 80 |
| 2 | 2013-2014 | - | - | - | - | 12 | 120 | - | - | - | - | 12 | 120 |
| 3 | 2014-2015 | - | - | - | - | 4 | 40 | - | - | - | - | 4 | 40 |
| 4 | 2015-2016 | - | - | - | - | 5 | 50 | 2 | 600 | - | - | 7 | 650 |
| 5 | 2016-2017 | - | - | - | - | 2 | 20 | 2 | 600 | - | - | 4 | 620 |

## 5. மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழக அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி

மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசிடமிருந்து கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | மத்திய பட்டு வாரியம் (ரூபாய் இலட்சத்தில்) | தமிழக அரசு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2012-2013 | 1,371.500 | 797.480 | 2,168.980 |
| 2 | 2013-2014 | 1,642.639 | 895.123 | 2,537.762 |
| 3 | 2014-2015 | 918.920 | 669.134 | 1,588.054 |
| 4 | 2015-2016 | 470.840 | 2,522.040 | 2,992.880 |
| 5 | 2016-2017 | 823.186 | 1,791.000 | 2,614.186 |

2016–2017–ஆம் ஆண்டில் மத்திய ஜவுளித்துறை, மாநிலங்களுக்கு அளிக்கின்ற நிதியினை குறைத்தும், கிரியா ஊக்கித்திட்டத்தினை மத்திய பகுதி திட்டமாக மாற்றியும் அமைத்துள்ளது. மத்திய ஜவுளித்துறையின் நிதி குறைப்பை ஈடுசெய்ய தமிழ்நாடு அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 6. தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஒசூர்

2016–2017ஆம் ஆண்டில், ஒசூர் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையத்தில் 1,580 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டுப்புழு வளர்ப்பில் ஒரு வார பயிற்சியும் 220 பட்டுநூற்பு தொழிலாளர்களுக்கு பட்டு நூற்பில் 15 நாட்கள் பயிற்சியும் வழங்கப்பட்டது. மத்திய பகுதி திட்டத்தின் கீழ் 2060 விவசாயிகளுக்கும் வெண்பட்டுப்புழு வளர்ப்பு குறித்த ஒரு வார பயிற்சி அளிக்கப்பட்டது. அதே போல் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை, அட்மா திட்டத்தின் கீழ் 40 விவசாயிகளுக்கு பட்டுப்புழுவளர்ப்பில் 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வருடம் | பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2012-2013 | 2,173 |
| 2 | 2013-2014 | 2,130 |
| 3 | 2014-2015 | 2,983 |
| 4 | 2015-2016 | 1,561 |
| 5 | 2016-2017 | 3,900 |

## 7. அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

கச்சாப் பட்டுநூல் முறுக்காளர்கள் மற்றும் பெருநெசவாளர்களுக்கு கச்சாப்பட்டு வர்த்தகம் செய்ததன் மூலம், காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், 2016–2017ஆம் ஆண்டில், ரூ.36.76 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்தின் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | கொள்முதல் | | விற்பனை | | நிகர இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | 2012-2013 | 61.885 | 1401.07 | 61.885 | 1401.07 | 21.02 |
| 2 | 2013-2014 | 81.577 | 2441.07 | 81.577 | 2441.07 | 36.62 |
| 3 | 2014-2015 | 94.272 | 2397.19 | 94.272 | 2397.19 | 35.96 |
| 4 | 2015-2016 | 89.756 | 2021.37 | 89.756 | 2021.37 | 30.47 |
| 5 | 2016-2017 | 81.520 | 2450.21 | 81.520 | 2450.21 | 36.76 |

**8. தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்**

கச்சாப்பட்டு மற்றும் நெசவிற்கு தயாரான பட்டுநூல் ஆகியவற்றை முறுக்கேற்றும் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்ததன் மூலம், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்) காஞ்சிபுரம், 2016–2017ஆம் ஆண்டில், ரூ.91.89 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் "டான்சில்க்" (இணையத்தின்) சாதனை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | வருடம் | கொள்முதல் | | விற்பனை | | நிகர இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | அளவு (மெட்ரிக் டன்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | 2012-2013 | 248 | 6576.83 | 255 | 6726.61 | 70.49 |
| 2 | 2013-2014 | 270 | 9095.25 | 267 | 9012.22 | 73.80 |
| 3 | 2014-2015 | 259 | 7859.07 | 262 | 8010.99 | 88.00 |
| 4 | 2015-2016 | 300 | 8412.04 | 304 | 8552.00 | 107.73 |
| 5 | 2016-2017 | 263 | 9071.64 | 263 | 9091.39 | 91.89 |

**பா.பென்ஜமின்**
**ஊரகத் தொழில் துறை அமைச்சர்**